தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 20, சுக்ல—திருவள்ளுவர் ஆண்டு 2021.

1990, ஏப்ரல் 3, செவ்வாய்க்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் காலை 9.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு''

கற்றவனுக்குத் தன் நாட்டைப் போலவே வேற்று நாடும் தன் நாடாகவே ஆகிவிடும். உலகிலுள்ள அனைத்து ஊர்களும் தன் ஊராகவே ஆகிவிடும். இப்படி ஒரு நிலை உள்ளபோது, ஒருவன் தான் சாகும் வரையில் தொடர்ந்து கல்லாமல் காலங் கழிப்பது ஏன்?

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

பெரம்பலூர் தீயணைப்பு நிலையம்

* *1615* திருமதி பாப்பா உமாநாத்:

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திருச்சி மாவட்டம், பெரம்பலூர் வட்டத்திலுள்ள தீயணைப்பு நிலையத்திற்கான வண்டிகளும், ஆம்புலன்ஸ்களும் பழுதுபட்டுள்ளன என்பதும், தண்ணீர் சேமிப்புக் கிடங்கில் தண்ணீர் இல்லாமல் இருப்பதும் அரசின் கவனத்துக்கு வந்துள்ளதா?

(ஆ) இந்நிலையை மாற்ற அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திருமதி பாப்பா உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் என்பது மிகவும் பின்தங்கிய பகுதி. பொதுவாகவே, எப்போதுமே தண்ணீர்த் தட்டுப்பாடு இருக்கக் கூடிய பகுதி. பல இடங்களில் தீப்பிடித்தபோது, இது முறையாகச் செயல்படாத காரணத்தினால், மற்றும் தண்ணீரும் இல்லாத தினால் அது பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய தகவல் கிடைத்திருக் கிறது. அன்றையதினம் கிடைத்த தகவலின் அடிப்படையில்தான் இந்தக் கேள்வியையே எழுப்பி இருக்கிறேன். ஆகவே, இதைப்பற்றி,

ஏன் ஏற்பட்டது அப்படி என்று விசாரிக்கப்பட்டதா? அப்படி ஏற்பட்டிருக்கக்கூடிய நிலையில் நடவடிக்கை எடுக்கப்பட்டதா? இனி சரியாக வைப்பதற்கான உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, பெரம்பலூர் தீயணைப்பு நிலையத்திலே உள்ள ஆம்புலன்ஸ், அதாவது நோயாளர்களுடைய ஊர்தி எண். எம்.எஸ்.எம். 3261, 3–6–1980 முதல் பயன்பட்டு வந்து, திடீரென என்ஜினில் பெரும் பழுது காரணமாக, 9–11–1988 முதல் ஓடாத நிலை அடைந்தது, அதனை 'கன்டெம்', அதாவது முடக்கிப் போடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும்கூட, அதற்கான ஆணையை எதிர்நோக்கி புதிய ஆம்புலன்ஸ்—புதிய நோயாளர் ஊர்தி—5–2–1990 முதல் ஒதுக்கீடு செய்யப்பட்டு இப்போது பணியாற்றி வருகின்றது. அம்மையார் அவர்கள் இந்தக் கேள்வி எழுப்பியபோது பழுதுபட்ட வண்டி இருந்தது. கேள்விக்கான விடை வருகிற நேரத்தில் புதிய வண்டி அங்கே வந்து விட்டது என்ற மகிழ்ச்சியான செய்தியைச் சொல்லிக்கொள்கிறேன்.

திருமதி பாப்பா உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பெரம்பலூரில் மட்டுமல்ல; தொடர்ச்சியாகப் பல இடங்களில் இருந்து வருவதும் அதனால் தீப்பிடித்த நேரத்தில் பயனில்லாமல் போவதும், நடைபெற்று வருகிறது. ஆகவே, பொதுவாக தீயணைப்பு என்ற பொருளுக்குத் தகுந்த மாதிரி எல்லாம் முறையாக நடவடிக்கை எடுத்து, இதுபோன்ற சம்பவங்கள் நிகழாமல் பார்ப்பதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நடவடிக்கை எடுத்ததற்கு அடையாளத்தைத்தான் இப்போது சொன்னேன்.

திரு. சம்சுதீன் என்கிற கதிரவன்: தலைவர் அவர்களே, ஓர் ஊர்தி உள்ள தீயணைப்பு நிலையம் ஏற்படுத்த எவ்வளவு செலவாகும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, ஓர் ஊர்தி உள்ள தீயணைப்பு நிலையம் ஏற்படுத்துவதற்கு ஆண்டொன்றிற்கு ஆகக்கூடிய செலவு—தொடர் செலவினம்—ரூ. 4.50 இலட்சம்; தொடராச் செலவினம்—ரூ. 6 இலட்சம்.

திரு. கொ. மாதப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள தீயணைப்பு நிலையங்களில் புதிய வண்டிகள் கொடுக்கப்பட்டும், அங்கே புதிய ஹோஸ்-பைப்புகள் இல்லாமல் பழையதாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, தீயணைப்பதற்கு மிகவும் சிரமமாக இருக்கின்றது. (குறுக்கீடு) எனவே, ஹோஸ்களும் புதிதாக மாற்றப்படுமா என்று கேட்டுத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை பயன்பட முடியாதவையாக இருந்தால் நிச்சயமாக மாற்றப்படும்.

1990 ஏப்ரல் 3]

திரு. எம். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள மொத்த தீ அணைப்பு நிலையங்கள் எத்தனை? இதிலே ஒரு ஊர்தி உள்ள தீ அணைப்பு நிலையங்கள், 2 ஊர்திகள் உள்ள தீ அணைப்பு நிலையங்கள் எத்தனை என்பதை மாண்புமிகு முதலமைச்சர் ஐயா அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதல்வரா; ஐயாவா! (சிரிப்பு)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: முதல்வரே தெரிவிப்பார் ஐயா தெரிவிக்க மாட்டார் (சிரிப்பு) தீ ஓர் ஊர்தி உள்ள தீ அணைப்பு நிலையங்கள் 113; இரண்டு ஊர்தி உள்ள தீ அணைப்பு நிலையங்கள் 13; பல ஊர்திகள் உள்ள தீ அணைப்பு நிலையங்கள் 65; மொத்தம் 191 தீ அணைப்பு நிலையங்கள் இருக்கின்றன. அவற்றில் பயன்படுகின்ற வண்டிகள் 247 தீ அணைப்பு வண்டிகள்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, பெரம்பலூர் வட்டத்திலுள்ள அந்த ஆம்புலன்ஸ் வண்டி பழுதுபட்டு இருக்கின்ற காரணத்தால் முடக்கி வைக்கப்பட்டு இருக்கிறது என்ற பதிலைச் சொன்னார்கள்; புது வண்டி வந்து விட்டது என்றும் சொன்னார்கள். ஆனால் பலயிடங்களில் இப்படி மோசமான நிலையில் இருக்கின்ற நோயாளிகள் வண்டிகள் முடக்கி வைக்கப்படாத காரணத்தால் நோயாளிகளை ஏற்றிக்கொண்டு புறப்படுகின்றபோது நோயாளிகள் வண்டி என்றும்,பாதி வழியில் அது அமரர் ஊர்தியாக மாறுவதாகவும் சில தகவல்கள் வந்து இருக்கின்றனவா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நோயாளிகளை ஏற்றிக் கொண்டு செல்லுகின்ற வண்டிகளே சில நேரங்களில் நோயாளியாக ஆகிவிடுகின்றன. அவற்றைத்தான் 'கன்டெம்' செய்கிறோம். ஆங்கிலத்தில் 'கன்டெம்' என்கிறோம், தமிழில் அதை ''முடக்கிப் போட்டு விடுகிறோம்'' என்று சொல்கிறோம். சில நேரங்களில் அதிக ஆபத்திற்கு ஆளானவர்கள், படுகாயம் உற்றவர்கள் இப்படி ஆம்புலன்ஸ் வண்டிகளில் செல்கின்ற நேரத்தில் இடையிலேயே அவர்கள் மறைந்து போவது உண்டு, இறந்து போவது உண்டு.

திரு. செங்கை சிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீ என்ற உடனே சமீபத்திலே இன்றைய பத்திரிகையிலே செய்தியைப் பார்த்ததில் 27க்கு மேற்பட்ட தீ அணைப்பு நிலையங்கள் தற்காலிகமாக அமைக்கப்படுகிற செய்தியை நான் பார்த்தேன். குறிப்பாக சென்னையில் கோடைக் காலங்களில் அடிக்கடி தீ விபத்து ஏற்படுவது வாடிக்கையாக இருக்கிறது. ஆகவே, இந்த தீ அணைப்பு நிலையங்களை குடிசைப் பகுதிகளில் உள்ள காவல் நிலையங்களில் தற்காலிகமாக கூடுதலாக அமைக்கின்ற யோசனை அரசிடம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. ஜி, பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தீ அணைப்பு நிலையங்களுக்கு படிப்படியாக ஆம்புலன்ஸ் வழங்கப்படும் என்று சொன்னார்கள். சென்ற ஆண்டுக்கும் இந்த ஆண்டுக்கும் எத்தனை வழங்கப்பட்டிருக்கின்றன? பாக்கி தீ அணைப்பு நிலையங்களுக்கு எப்படி ஆம்புலன்ஸ் வழங்க இருக்கிறார்கள் என்ற விவரங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்ட எல்லா இடங்களிலும் தீ அணைப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டு விட்டன. இந்த ஆண்டு தீ அணைப்பு நிலையங்கள் எவ்வளவு அமைக்கப்படும் என்பது காவல் துறை மானியக் கோரிக்கையின் போது எடுத்துக் கூறப்படும்.

திரு. உ. ரா. வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் தீ அணைப்புக்காக ஸ்னோர்கல் என்கிற, பல மாடிக் கட்டிடங்களில் பிடிக்கக்கூடிய தீயை அணைக்கக்கூடிய கருவி இருக்கிறது. பல அடுக்கு மாடிக் கட்டிடங்கள் திருச்சி, கோவை, மதுரை போன்ற நகரங்களிலும் இப்போது பெருகியிருப்பதால் அந்த நகரங்களிலும் இதுபோன்ற ஸ்னோர்கல் வண்டிகள் அமைத்துத் தரப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதி ஆதாரத்தைப் பொறுத்து அந்தத் தேவைகள் படிப்படியாக நிறைவு செய்யப்படும்.

டாக்டர் து. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீ அணைப்பு நிலையங்களில் அனேகமாக பெரும்பகுதி நிலையங்களில் உள்ள தீ அணைப்பு வண்டிகளும், ஆம்புலன்ஸ்களும் பழுதுபட்ட நிலையில் அல்லது மிகக் குறைந்த செயல்திறன் உள்ள நிலையில் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஆகவே அந்த அதிகாரிகள் கவனம் செலுத்தி அதை அப்போதைத்கு அப்போது தயார் நிலையில் வைத்துக்கொள்ள சிறந்த முயற்சிகளை எடுக்கிறார்களா, இல்லையா என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா? அனேகமாக அவர்கள் முயற்சி எடுக்கவில்லை என்று தெரிகிறது. அதை அரசு ஒரு ஆய்வு செய்து எந்த நிலையிலும் இந்த வண்டிகளைத் தயார் நிலையில் வைக்க ஏற்பாடு செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

10.10 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல், மொத்தம் உள்ள 247 நீர்தாங்கி தீயணைப்பு வண்டிகளில் 171 வண்டிகள் மிகவும் நல்ல நிலையில், பணியாற்றுகிற நிலையிலே உள்ளன. பழுதடைந்து, ஓடாத நிலையிலே இருந்த 23 வண்டிகள் இப்பொழுது பழுது பார்க்கப்பட்டு ஓடும் நிலைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. 53 வண்டிகள்தான் முற்றிலும் பழுதடைந்து இருக்கின்றன.

1990 ஏப்ரல் 3]

அந்த வண்டிகளிலே ஒன்றுதான், நான் ஏற்கெனவே குறிப்பிட்ட பெரம்பலூர் வண்டியாகும். உடனுக்குடன் இவை சரிசெய்யப் படுவதற்கு அரசு தீவிர கவனம் செலுத்தி வருகிறது.

திரு. பெ. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில நேரங்களில் நச்சுத்தன்மை கொண்ட தண்ணீரை வெளியேற்றுகின்ற பொறுப்பு தீயணைக்கும் படைக்கு இருக்கிறது. அப்படி வெளியேற்றுகின்ற நேரத்தில், ஆழமான நீர்நிலைகள், கிணறுகள், குளங்கள் போன்றவற்றில் இருந்து வெளியேற்றும் பொழுது, குறிப்பிட்ட அளவு ஆழம் இருந்தால்தான் எங்களால் வெளியேற்ற முடியும்—அதாவது சுமார் 40, 45 அடிக்கு மேலே எங்களிடம் அந்த 'சக்கிங் பைப்ஸ்' இல்லை என்று சொல் கிறார்கள். எவ்வளவு ஆழமாக இருந்தாலும் அதற்கேற்ற அளவுக்கு இந்த 'சக்கிங் பைப்ஸ்' கொடுப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியின் அடிப்படையில் அந்தக் கருத்து கவனத்தில் கொள்ளப்படும்.

திரு. என். கணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீயணைப்பு வண்டிகள் எத்தனை இருந்தாலும், சென்னை நகரத்தில் இப்போது தண்ணீர்த்தட்டுப்பாடு அதிகமாக இருக்கிறது. தீயணைப்பு வண்டிகள் வந்துவிட்டாலும், அங்கே தண்ணீர் கிடைக்காமல் தீயை அணைப்பதற்கு உடனடியாக இயலாமல் போய் விடுகிறது. எனவே, தீயணைப்பு வண்டியோடு தண்ணீர் வண்டியும் சேர்ந்து சென்னை நகரத்திலே இயங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அதுபற்றியும் யோசிக்கலாம்.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப் பகுதிகளில் இன்றைக்கு அதிகமாகத் தீ விபத்துக்கள் ஏற்படுகின்ற காரணத்தை முன்னிட்டு, ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒரு தீயணைப்பு நிலையம் என்ற அடிப்படையில், அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களுடைய கட்டிடங்களிலேயே அதற்கான கட்டிடத்தை அமைத்து, நிதிப் பற்றாக்குறை இருந்தால் அந்தந்த ஊராட்சி ஒன்றியத்தினுடைய பொது நிதியிலிருந்துகூட ஒரு பங்கை எடுத்துச் செய்வதற்கான நடவடிக்கையை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னேன், ஒரு தீயணைப்பு நிலையம், ஓர் ஊர்தி இருக்கிற நிலையத்தை அமைப்பதற்கே தொடராச்

செலவினம் 6 இலட்சம் ரூபாயும், தொடர் செலவினம் 4½ இலட்சம் ரூபாயும் ஆகிறது என்று. எனவே, நிதி ஆதாரம் பெருகுமே யானால், மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோல ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு தீயணைப்பு நிலையத்தை அமைக்க முடியும்.

திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள அனைத்துத் தீயணைப்பு நிலையங்களில் எத்தனை தீயணைப்பு நிலையங்கள் வாடகைக் கட்டிடத்தில் இருக்கின்றன? எத்தனை சொந்தமான கட்டிடத்தில் இயங்குகின்றன? அதேமாதிரி தமிழகத்திலுள்ள தீயணைப்பு அதிகாரிகளுக்குக் குடியிருப்பு இல்லங்கள் எத்தனை இடங்களில் இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தனி வினா எழுப்பினால் விவரமான பதில் அளிக்க இயலும்.

தனியாகக் காவல் நிலையம் அமைத்தல்.

* 3358 திரு. யூ. கே. வெள்ளிங்கிரி :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை மாவட்டம், பி. 3 போலீஸ் ஸ்டேஷன் பகுதியில் உள்ள கணபதி மில்லில் தனியாக போலீஸ் ஸ்டேஷன் அமைக்க அரசு உத்தரவிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவங்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு எத்தனை காவல் நிலையங்கள் புதிதாக ஏற்படுத்தப்பட்டன? அறிவிக்கப்பட்டவை எத்தனை என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்டவாறு 11 இடங்களில் காவல் நிலையங்களும், 2 இடங்களில் புறக்காவல் நிலையங்களும், 3 இடங்களில் புறக்காவல் நிலையங்கள் முழுக்காவல் நிலையங்களாக மாற்றியும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் புதிதாகக் காவல் நிலையங்களை ஏற்படுத்தக்கூடிய பட்டியலில் வேலம்பாளையம் பேருராட்சிக்குட்பட்ட அனுப்பர்பாளையத்தில் புதிய காவல் நிலையம் அமைக்கக்கூடிய புதிய திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.